Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 73/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW6 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | ஜாகிர் உசேன் |
| Father's Name | – | அப்துல் மஜித் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 05th March 2025.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent. 317 Petition filed and allowed. Accused counsel present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது அங்கலக்குறிச்சியில் குடியிருந்து கொண்டு சுய தொழில் செய்து வருகிறேன். கடந்த 2017 ம் வருடம் தேதி, மாதம் ஞாபகம் இல்லை, மாலை சுமார் 07.30 மணியளவில் ஆழியாரில் இருந்து பொள்ளாச்சி நோக்கி கார் ஒன்று தெற்கிலிருந்து வந்துகொண்டிருந்தது. நான் வடக்கிலிருந்து சென்று கொண்டிருந்தேன். அப்போது பாக்கியா என்ற நபர் மேற்படி ரோட்டை கடக்கும்போது மேற்படி கார் அவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது.

அதில் அவர் காருக்கு கீழே சிக்கிக் கொண்டார். நான் அவரை வெளியே எடுத்து அவசர ஊர்தியில் அனுப்பிவைத்தேன். காரை ஓட்டிய நபரை பார்த்தால் அடையாளம் தெரியும். அவர் மனுவின் பேரில் ஆஜரில்லை. மோதிய வாகனம் நீலநிறத்தில் இருந்தது. காரைப் பார்த்தால் அடையாளம் தெரியும். மேற்படி நபர் சிகிச்சை பலனின்றி பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டதாகக் கேள்விபட்டேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

மேற்படி விபரங்களைதான் போலிசார் விசாரணையிலும் கூறினேன். நான் இரு சக்கர வாகனத்தில் வரும்போதுதான் விபத்து ஏற்பட்டது. வண்டியின் அடியில் சிக்சிய நபரை நான்தான் வெளியே எடுத்து அவசர ஊர்தில் அனுப்பிவைத்தேன் என்றால் சரிதான். இறந்துபோன நபர் எனது வீட்டின் அருகில் வசிப்பவர் ஆவார். அவரது மகனுக்கு நான் தகவல் கொடுத்தேன் என்றால் சரியல்ல, இறந்த நபரின் வீட்டின் முன்புதான் விபத்து ஏற்பட்டது. போலிசார் சம்பவ இடத்திற்கு 15 நிமிடத்தில் வந்துவிட்டனர். சம்பவம் எவ்வாறு நடைபெற்றது என்று புகார் அளித்தேன் என்றால் சரிதான்.

சம்பவத்தன்று விசாரித்ததோடு பின்னிட்டு என்னை விசாரிக்கவில்லை. அடிபட்ட நபருக்கு சுமார் 70 வயதிருக்கும். அவருக்கு கண் நன்றாக தெரியும். சம்பவம் ரோட்டை கடக்கும்போதுதான் நடந்தது என்றால் சரிதான். சம்பவ இடம் பிரதான சாலை என்றால் சரிதான். தெற்கிலிருந்து வரும்போது ரோட்டின் வலது புறத்தில் சம்பவம் நடந்தது. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் இறந்த நபர் தெரிந்தவர் என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam, B.A.B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.